மைல்கள் சென்னைக்கு வரவேண்டிய நிலைமை நம் நாட்டு மக்களுக்கு இருக்கிறது. நாங்கள் இது தவிர்க்கப்பட வேண்டும் என்கிறோம். ஆனால் எதிர்க்கட்சிகளும் இது பற்றி உற்சாகத்தோடு பேசினால், நிச்சயம் அதுவரும் ஆனால் அப்படி அவர்கள் பேசியதாக நான் கேள்விப்படவில்லை.

*Temporary Courts for Tindivanam*

* 246 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether temporary Civil Courts are being set up in Tindivanam from November, December 1969 ; and

(*b*) the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திண்டிவனத்திலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் முடிவுபெறாத வழக்குகள் அதிகமாக இருந்ததனுல் கூடுதலாக தற்காலிக மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டது. கூடுதலான இம்மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 1969, டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து செயலாற்றத் தொடங்கியது.

காஞ்சீபுரம், வட ஆர்க்காடு, சாரம் கூட்டுறவு நூற்பாலைகள்

*247 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள (1) காஞ்சீபுரம், (2) வட ஆர்க்காடு, (3) சாரம் கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் ஏற்பட்ட நஷ்டம், கணக்கில் ஏற்பட்ட நஷ்டமாகும். இந்த ஆலையின் நெருக்கடி நிதி, அதன் நஷ்டத்தை விட அதிகமாகும். இந்த ஆலைகளில் நஷ்டத்தைத் தவிர்க்க, உற்பத்தியைப் பெருக்கவும், பஞ்சு கொள்முதலில் கவனத்தை அனுசரிக்கவும், தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியான ஒத்துழைப்பைப் பெறவும், முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. விநயகம் : சார், வட ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் கணக்கில் ஏற்பட்டது என்று சொன்னார்களே, ஸ்பின்னிங் மில்லை இது பாதிக்காதா? Is it accounting deficiency? தென் ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் இருக்கிறது. நாம் நடத்தும் தொழில்களில் நஷ்டம் கணக்குப் பார்த்த பிறகு தெரிகிறது. தனியார்களிடம் விடுவதனுல், இப்படி நஷ்டம் ஏற்படாது, அதற்கு அவர்களுடைய திறமைதான் காரணம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?